[2015 பிப்ரவரி 20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 44, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

44—

இசைக் கல்லூரி

***21666—திரு. சி. மைக்கேல் ராயப்பன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலியில் அரசு இசைக் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருநெல்வேலி மாவட்டம், திருநெல்வேலியில் அரசு இசைக் கல்லூரி துவங்கும் செயற்குறிப்பு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள்.*

திரு. க. தமிழழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளைய உலகம் எப்படி இருக்க வேண்டும் என்று கனவுகள் கண்டாயே அம்மா. பசியும் பட்டினியும் இல்லாத தமிழகத்தை உருவாக்கிக் காட்டினீர்கள் அம்மா. சுவரில் வரைந்த சேவல் கூவி விடிந்திடும் உலகம் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் சொன்னால் போதுமே 234 தொகுதிகளிலும் இரட்டை இலை வென்றிடும் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) கோடையில் மக்கள் வாடும் போது நீரோடையாய் வந்தாயே அம்மா. எமானி*

மக்களை ராஜாளி மக்களாய் மாறிட்டச் செய்தாயே அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) வீட்டுக்கு வீடு விலையில்லா ஆடு, மாடு என்று திட்டங்கள் போட்டுத் தந்தாயே அம்மா. வீட்டுக்கு வீடு விலையில்லா மின் பொருள்கள் வழங்க சட்டங்கள் போட்டுத் தந்தாயே அம்மா. தமிழக மக்களுக்கு மலிவு விலையில் மருந்து, மாத்திரைகள் தந்தாயே அம்மா. தமிழக வரலாற்றில் அரிசியில் இனி எவரும் அரசியல் செய்யாதபடி, தமிழக மக்களுக்கு விலையில்லா அரிசியும் வழங்கியது நீங்கள்தான் அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டுக்கு நாடு பொறாமைகொள்ளும் அறிவுப் போட்டியில் வென்றாயே அம்மா. நாட்டாமை செய்யும் நாட்டுடை வாளை நறுக்கி எறிந்தாயே அம்மா. (மேசையைத் தட்டும் ஒலி) முப்பெரும் ஆழி சூழ்ந்த தமிழ்நாட்டை மூழ்காமல் காத்தாயே அம்மா.

போராட்டம் செய்யும் சில பொறுப்பற்ற கூட்டம் நெருப்பிலிட்ட நெய்யாகும் அம்மா. ** அனலிலிட்ட நெய்யாகும் அம்மா. கருநாகம் ஒன்று நாடாள அன்று கதறித் துடித்தோமே அம்மா. கண்ணீரை விட்டு மக்கள் காவேரி கேட்டும், கருணாநிதி கேட்க பயந்தாரே அம்மா. (குறுக்கீடுகள்) என்னடா என்று கன்னட மாநிலத்தை எதிர்க்கத் துணிந்தாரே அம்மா. எல்லாரும் ஒன்றானார் என பயந்து காவேரி தந்தாரே அம்மா. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் துணைக் கேள்வி கேட்கவும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

திரு. க. தமிழழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) திருநெல்வேலியில். . (குறுக்கீடு)

முற்பகல் 11-25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: துணைக் கேள்வி கேளுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். துணைக் கேள்வி கேட்கச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. திரு. துரைமுருகன், உட்காருங்கள் (குறுக்கீடுகள்) அங்கே போங்கள். இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடு) இப்போது கேளுங்கள். உங்கள் கட்சி

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க

உறுப்பினர்களை உட்காரச் சொல்லுங்கள், உங்களுக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள். திரு. துரைமுருகன், என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, திரு. துரைமுருகனை பேசச் சொல்லியிருக்கிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் அவர்கள் குறிப்பிட்ட ** என்ற ஆட்சேபணைக்குரிய அந்தப் பகுதியை, நான் சொன்னது உட்பட அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. க. தமிழழகன் பேசிய ஆட்சேபணைக்குரிய அந்தப் பகுதி அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அதை நீக்கச் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பைப் படித்துப் பார்த்து, நீங்கள் சொல்வது குறித்து முடிவு செய்கிறோம். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு முடிவு சொல்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், நீங்கள் ஒரு மூத்த உறுப்பினர். இது அவைத் தலைவருக்கே உரிய அதிகாரம். அவைக் குறிப்புகளைப் பார்த்துவிட்டு நான் முடிவெடுக்கிறேன் என்று சொல்வதை நீங்கள் மறுக்க முடியாது. அதனால், நீங்கள் உட்காருங்கள். அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு, நான் நடவடிக்கை எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு நடவடிக்கை எடுக்கிறேன். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்கிறேன். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைக் குறிப்பை நீங்கள் படித்துப் பார்த்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2015 பிப்ரவரி 20]

சொல்வதையும்,. நீங்கள் படித்துப் பார்த்துவிட்டு அதில் ஆட்சேபகரமான பகுதி ஏதாவது இருக்குமேயானால், அது குறித்தும் நீங்கள் நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) அவைக் குறிப்பைப் படித்துப் பார்த்துவிட்டு சொல்கிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்வதை அவைக் குறிப்பைப் படித்துப் பார்த்துவிட்டு, தேவை ஏற்பட்டால் நீக்குவது குறித்து மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உரிய முடிவினை அறிவிப்பார்கள். (குறுக்கீடுகள்) உங்கள் தலைவரையும் தொடர்புபடுத்திக் குறிப்பிட்டிருக்கிறாரா என்பது குறித்து அவைக் குறிப்பைப் படித்துப் பார்த்துவிட்டு, முடிவு சொல்வதாகச் சொல்கிறேனல்லவா? பத்து நிமிடங்கள் பொறுங்கள். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இருக்கையில் உட்காருங்கள். திரு. துரைமுருகன், ஐந்து நிமிடங்கள் உட்காருங்கள். நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டுச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். அதைக் கொண்டு வரச் சொல்லுங்கள். அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு நடவடிக்கை எடுக்கிறேன்.

மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு, உரிய நடவடிக்கையை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் எடுப்பார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 45, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள் (குறுக்கீடுகள்) உறுப்பினர்கள் யாரும் அங்கே பார்த்து பேசக் கூடாது. திரு. சுந்தர்ராஜன், இங்கே பாருங்கள். (குறுக்கீடு) நீங்கள் உங்களுக்குள்ளே பேசிக்கொள்ளக்கூடாது. என்னைப் பார்த்துப் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். நடவடிக்கை எடுக்கிறேன். என்ன என்று பார்க்கிறேன். (குறுக்கீடு) நான் என்ன என்று பார்த்துவிட்டு நடவடிக்கை எடுக்கிறேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் உங்கள் இருக்கையில் உட்காருங்கள். திரு. க. தமிழழகன், நீங்கள் உட்காருங்கள். நான் அவைக் குறிப்பைப் பார்த்துவிட்டு நடவடிக்கை எடுக்கிறேன். உட்காருங்கள். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.